

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியனை ஆதரித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் திருவிடைமருதூர் பகுதியில் வாக்கு சேகரித்தார்.




அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் க.சொ.க.கண்ணனுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் தீவிர வாக்கு சேகரித்தார் . உடன் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைப்பது உறுதி

# திருச்சி நகரைச் சுற்றி புறவழிச்சாலை அமைக்கப்படும்!

## திருச்சி மேற்கு தொகுதி வேட்பாளர் – அமைச்சர் கே.என்.நேரு வாக்குறுதி!



திருச்சி, ஏப்.22 -

திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் முதன்மைச் செயலாளர், மேற்கு தொகுதி சட்டமன்ற வேட்பாளருமான கே.என். நேரு அவர்கள் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்கள் மனதில் வைத்திருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் மகளிர், மாணவர், விவசாயிகள், தொழிலாளர்கள், அடித்தட்டு மக்களுக்காக ஏராளமான மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன அந்த திட்டங்கள் அனைத்தும் குறிப்பாக இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும்.

மகளிர் உதவித்தொகை ரூபாய் 10,00, கல்லூரி மாணவர்களுக்கான புதுமைப்பெண் திட்டம், பள்ளி குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம், ஆகியவை மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறது நிச்சயமாக அது தேர்தலில் எதிரொலிக்கும்

தமிழகத்தில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமையும் தலைவர் அவர்கள் மீண்டும் முதலமைச்சர் ஆக பதவி ஏற்பார் தமிழக மக்களின் மனநிலை தெளிவாக இருக்கிறது அவர்கள் மனதில் தி.மு.க.வும் முதலமைச்சர் அவர்களும் இருப்பது அவர்கள் முகத்தைப் பார்த்து தெரிந்து கொள்ள முடிகிறது எனவே அவர்கள் தி.மு.க.விற்கு தான் வாக்களிப்பார்கள்.

கூட்டணியே பலம் கூட்டணி கட்சியின் பலம் ஒத்துழைப்பினால் திமுக வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாக இருக்கிறது திமுக தரப்பு தனி பெரும் பான்மையுடன் ஆட்சி அமைக்கும் இது உறுதி முதலமைச்சர் அவர்கள் கடந்த ஐந்தாண்டுகளில் திருச்சி மாவட்ட வளர்ச்சி திட்ட பணிக்காக ரூபாய் 26 ஆயிரம் கோடி அள்ளி கொடுத்திருக்கிறார்.

கடந்த தேர்தலின் போது நான் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறேன் குறிப்பாக திருச்சியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்பது மக்களின் கால் நூற்றாண்டுக்கான கனவு திட்டமாகும். அதனை நான் வாக்குறுதியாக வைத்தேன். நிறைவேற்றி கொடுத்திருக்கிறேன் இது தேர்தலில் கனவு திட்டம் தொடர்பாக தேர்தல் அறிக்கையில் வரிசையாக விரிவாக சொல்லி இருக்கிறோம். பல் மருத்துவக் கல்லூரி, சித்தா மருத்துவக் கல்லூரி அமைப்பது, பல இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுப்போம் கோர்ட் முதல் அல்லித் துறை வரை புதிதாக சாலை, திருச்சி சுற்றி பைபாஸ் சாலை (புறவழிச்சாலை) அமைத்துக் கொடுப்போம் என்று வாக்குறுதி அளித்திருக்கிறேன் என்று கூறினார்.

# திருமயம் தொகுதியில் அமைச்சர் எஸ்.ரகுபதி பிரச்சாரம்!

புதுக்கோட்டை, ஏப்.22-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம் தொகுதி தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் எஸ். ரகுபதி, திருமயம் அருகே உள்ள குலமங்கலம், வி.லட்சுமிபுரம், மேலப்பளையூர், பன்னீர் பள்ளம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதன் பிறகு பொதுமக்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி, ஜல்லிக்கட்டுக்கு அ.தி.மு.க.வால் கொண்டு வரப்பட்ட சட்டம் சரியில்லை என்று உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று ஐந்து நீதிபதிகள் கொண்ட பெஞ்சில் நடைபெற்ற போது சிறந்த வழக்கறிஞர்களை கொண்டு நமது சட்டத் துறையை தமிழக முதல்வர் முடுக்கி விட்ட காரணத்தால் 5 நீதிபதிகளும் ஒரே தீர்ப்பு வழங்கி ஜல்லிக்கட்டு நடைபெற காரணமாக இருந்தவர் தமிழக முதல்வர். பீட்டா அமைப்பு மாடுகளை குத்துகிறார்கள், கொம்பை பிடிக்கிறார்கள். முருகன் விட்டு விடுவாரா? துன்புறுத்துகிறார்கள் என்று பல்வேறு குற்றச்சாட்டுகளை உச்சநீதிமன்றத்திலே தீர்ப்பு சொல்லி வாதாடிய போது ஜல்லிக்கட்டு ஒரு வீர விளையாட்டு அதற்கு நாங்கள் அனுமதி தருகிறோம் என்று வாங்கி ஜல்லிக்கட்டை நிலை நிறுத்தியவர் ஜல்லிக்கட்டு நாயகர், ஜல்லிக்கட்டு பாதுகாவலர் தமிழக முதல்வர் தான்.


4,230 கோவில்களுக்கு குட முழுக்கு செய்தது தான் திராவிடமாடல் அரசு. ரூ.300 கோடி செலவில் திருச்செந்தூர் கோவில் திருப்பதி கோவிலுக்கு இணையாக புதுப்பிக்கப் பட்டுள்ளது. தமிழருக்கு மட்டுமே சொந்தமான கடவுள் ஒன்று இருக்கிறார் என்றால் அது முருகா கடவுள் தான். தமிழ் கடவுள் முருகனுக்காக கொண்டாடப்படும் பண்டிகை தான் தைப்பூசம். அந்த தமிழ் கடவுளை யாராவது கையில் எடுத்தால் விடமாட்டார். நமக்கு மட்டுமே துணையாக இருப்பார். குலமங்கலத்திற்கு ரூ.3 கோடியே 70 லட்சம் மதிப்பீட்டில் சிவன் கோவில் கட்டி கொடுக்கப் பட்டுள்ளது. ரூ.28 லட்சம் மதிப்பீட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 70 வீடுகள் ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து ஐந்து வருடம் இந்த ஊரில் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி வாங்கி தரப்பட்டுள்ளது.

இதுபோல் பல்வேறு நலத்திட்டங்கள் செய்யப் பட்டுள்ளதாக பொது மக்களிடம் எடுத்து கூறி தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். மேலும் திராவிட மாடல் அரசு திட்டங்கள் தொடரும் எனவும் தெரிவித்தார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் பூமலர் பொன்னுசாமி நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம், எருமப்பட்டி மற்றும் மோகனூர் கிழக்கு ஒன்றியங்களில் குக்கிராமங்களுக்குச் சென்று வீடு வீடாக கிராமப்புற பெண்களிடம் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி. இராமசுவாமி அ.அசோக்குமார், பெ.நவலடி, பி.பாலசுப்ரமணியம், மற்றும் பூவராகவன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருவெறும்பூரில் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை ஆதரித்து கமல்ஹாசன் எம்.பி. பிரச்சாரம்!



திருச்சி, ஏப்.22-

திருச்சி திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியில் மூன்றாவது முறையாகப் போட்டியிடும் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை ஆதரித்து, மக்கள் நீதி மையத்தின் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கமல்ஹாசன் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளரான அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு, திருச்சி திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட அரியமங்கலம் நேருஜி நகர் பகுதியில் பரப்புரை வாகனத்தில் நின்றபடி கமல்ஹாசன் பேசினார்.

கமல்ஹாசன் பேசும் போது ...

திருச்சியின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். திருச்சியை முன்னேற்றுவதற்கான ஒரே பாதை கல்வி. அந்த மகத்தான பாதையில் அன்பில் மகேஸ் சிறப்பாக பயணித்துவருகிறார். அதனால், தமிழகத்தில் பெண் கல்வி விகிதம் 34 விழுக்காடு அதிகரித்துள்ளது. இது போன்ற ஆக்கபூர்வமான பணிகளை தொடர்ந்து கிடைக்கச் செய்ய, மக்கள் அன்பில் மகேஸ்க்கு வாக்களிக்க வேண்டும்.

திருச்சியை மேலும் முன்னோக்கி எடுத்துச் செல்ல அன்பில் மகேஷ் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். திருச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான பாதை கல்வி. அத்தகைய கல்வியை மக்களுக்கு கொண்டு போய் சேர்க்கும் மகத்தான பணியை மகேஷ் செய்து வருகிறார். அதனால், தமிழகம் பெண் கல்வியில் 34 விழுக்காடு அதிகரித்துள்ளது.

“நான் முதல்வன்” திட்டத்தைக் கொண்டு வந்தவர் முதல்வர் மு.க. ஸ்டாலின். இத்தொகுதியில் ஒலிம்பிக் அகாடமி கொண்டுவந்தவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.

நான் கனவு கண்ட கல்வித் திட்டங்களை அமைச்சர் அன்பில் மகேஸ் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார். அவர் மீண்டும் வெற்றி பெற வேண்டும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கண்டு டெல்லியில் உள்ளவர்களுக்கு “வயிற்று எரிச்சல்” ஏற்படுகிறது.

கல்வி, சமூக நீதி மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் இருப்பதை கண்டு, டெல்லி ஆட்சியாளர்கள் (மத்திய அரசு) பொறுத்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றனர்.

தமிழகத்திற்கான கல்வி நிதியை நிறுத்தி வைத்துக்கொண்டு, இந்தியைத் திணிக்க முயலும் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானின் செயலை ஒரு வியாபாரி கூட செய்யமாட்டார்.

தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்கவேண்டும்.

“நாளை நமதே” என்ற முழக்கத்துடன்

கமல்ஹாசன் தனது உரையை முடித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர்

மு. மதிவாணன், பகுதிச் செயலாளர் விஜயகுமார், மக்கள் நீதி மய்யத்தின் நிர்வாகிகள், திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.



மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர் இரா.ஜெயராமகிருஷ்ணனுக்கு ஆதரவாக திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி அ.மடத்துக்குளம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் “உதயசூரியன்” சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் பி.எஸ்.தங்கராஜ், பேரூர் கழக செயலாளர் பாலகிருஷ்ணன், பேரூராட்சி தலைவர் பாலமுரளி உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## அழிவு சக்தியிடமிருந்தும், அடிவருடும் அரை மனிதரிடமிருந்தும், தமிழ்நாடு காப்பாற்றப்படுவது கழக அரசு இருப்பதால்தான்;

## பிற்போக்கு நச்சுகளைத் தடுக்கும் பெரிய ராணுவம் ஸ்டாலின்; அவர் தொடரட்டும், அன்னைத் தமிழ்நாடு வெல்லட்டும்!